ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2097/40 - 2018 නොවැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2018.11.16

*2097/40 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல்

திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் பிரிவின் கீழ் நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதிய 2054/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 03/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலின் அட்டவணையில் இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் விற்பனை நேரங்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு திருத்தியமைத்து 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதிய 2075/24 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 11/2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இவ்வறிவித்தல் மூலம் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

எஸ். ஆர். ஆட்டிகல,
செயலாளர்,
நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 15.

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| **உரிமத்தின் வகை** | | **திறக்கப்பட்டிருக்கும் நேரம்** |
| (i) | கள்ளுத் தவரணை | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை மற்றும் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை |
| (ii) | கள்ளுத் தவரணை (கூட்டுறவு முறையின் கீழ் செயற்படும்) | மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை |

02 பொருள்கோடல் : "கூட்டுறவு முறையின் கீழ்" என்பது மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது கொத்தணிகள் என கருத்திற் கொள்ளப்படுகிறது.

11-1402

1A - PG 4316 — 77 (2018/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.